







அனைவரும் வருக ! அருள்மிகு அழியா இலங்கை அம்மன் அருள்பெறுக !!

என்றென்றும் இறைபணியில்

**அருள்மிகு அழியா இலங்கை அம்மன் செம்பூத்துக்குல அறக்கட்டளை**

உ

## ஸ்ரீ அருள்மிகு அழியா இலங்கை அம்மன் (ஆயா) செம்பூத்துக்குல அறக்கட்டளை (பதிவு)

# அருள்மிகு அழியா இலங்கை அம்மன் திருக்கோயில்

(ஆயா கோயில்)

கூனவேலம்பட்டி புதூர். ராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.



அருள்மிகு அழியா இலங்கை அம்மன்

# திருவிழா அழைப்பிதழ்

துன்முகி வருடம் ஐப்பசி மாதம் 15ம் தேதி முதல் ஐப்பசி மாதம் 19-ம் தேதி வரை

**31.10.2016 திங்கட்கிழமை முதல் 4.11.2016 வெள்ளிக்கிழமை வரை திருவிழா நடைபெறும்.**

## குலதெய்வ வழிபாட்டின் அவசியம்

நம் செயல்கள் அறிவின் வாயிலாக செயல்பட்டு துன்ப மிகுதியில் மூழ்குவது குல தெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் தராததே! நம் சந்ததி நலமுடன் வாழ அல்லும் பகலும் அயராது பாடுபட்டு முன்னோர்கள் சேர்த்த செல்வ வளங்களை நாம் அனுபவிக்க உரிமையுண்டு. அதுபோல அவர்களின் நம்மை சார்ந்த எண்ணங்களுக்கு மதிப்பளித்து, மரியாதை செய்யும் ஸ்தூல, சூஷ்ம, காரண என்ற தேகத்தை பெற்ற நாம், நமக்கு முந்தைய முறையே ஸ்தூலஷ்-7, சூஷ்ம-7, காரண-7, 21. தலைமுறையரின் செல்களால். (ஜீன்ஸ்) அவர்களின் பதிவை உள்ளடக்கியுள்ள நாம், அவர்களின் எண்ணங்களால் இயங்கிக் கொண்டிருப்பதுதான் உண்மை. நம் முன்னோர்களின் எண்ணப்பதிவு பெட்டகம் தான் குல தெய்வம். குலதெய்வத்தை கூடித் தொழத்தொழ நம்முள்ளே நமக்கு மிக மிக மேன்மையான எண்ணங்கள் உதயமாகி நம்மை நல்வழி நடத்தும் என்பது சத்திய வாக்கு. ஆகவே குல தெய்வ வழிபாட்டினை கூட்டு வழிபாடாக சேர்ந்து சுயம்புவாக உள்ள நமது அன்னை அருள்மிகு அழியா இலங்கை அம்மனுக்கு 365 நாட்களும் அபிஷேக ஆராதனையும், பிறருக்கு அன்னதானம் செய்து எல்லா வளமும் பெறுவோமாக!!!

குல தெய்வம் என்பது தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாக இருந்து முதன்மை படுத்தி முக்கியத்துவம் கொடுத்து நம்முடைய நலன்களில் அக்கறை செலுத்தக்கூடியது. தன் குழந்தைகளின் தேவைகளை உணர்ந்து அவர்களுக்கு உடனடியாக நிறைவேற்றச் செய்வது குல தெய்வம்தான். அதனால் குல தெய்வ வழிபாடு என்பது மிக முக்கியம். குல தெய்வத்தை பரம்பரை பரம்பரையாக வணங்கிவரும் பொழுது அந்த குடும்பத்திற்கு அந்த தெய்வம் மிக பரிச்சயமானதாக இருக்கும். அதனால் தான் எந்த சுபகாரியங்கள் நடந்தாலும் முதலில் குல தெய்வத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

# அருள்மிகு (ஆயா) அழியா இலங்கை அம்மன் திருக்கோயில்

## செம்பூத்துக்குல பங்காளிகள் திருவிழா அழைப்பிதழ்

### அழியா இலங்கை அம்மன் துதி

செல்வமும் சிறப்பும் சேரும் செழுந்திரு புகழுமாகும்
கல்வியும் கனகமும் எய்தும் கருணையும் அறிவும் உண்டாம்
நல்லனவெல்லாம் நன்னும் ஆயா கோவில் வாழ்
திரு அழியா இலங்கையம்மன் தன் செழுமலரடிகள் வணங்குவார்கே.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாய் உலகை காக்கும் பராசக்தியானவள் பல திருநாமங்கள் கொண்டு பல்வேறு திருத்தலங்களில் பல வடிவங்களாக அருள் ஆட்சி செய்து வருகிறாள். இத்தகைய சிறப்புடைய அன்னையின் ஆலயங்கள் பலஉள. அவற்றுள் வன்மீகம் எனும் புற்று வடிவமாக இருந்து அருள் பாலிக்கும் அன்னை ஆயா கோயில் எனும் நற்பதியில் **அழியா இலங்கை அம்மன்** என்னும் திருநாமம் தாங்கி கல்வியின் வடிவாய் சரஸ்வதியாகவும், செல்வத்தின் அழகாய் லட்சுமியாகவும், வரத்தின் வடிவாம் துர்க்கையாகவும் மூன்று நிலைகளில் அருள்பாலிக்கின்றாள். மேற்படி அன்னையானவள் பயம், துக்கம், பில்லி, சூன்யம், ஏவல் முதலான தீய சக்திகளை அழித்து எல்லாவிதமான உயிர்களும் பயமின்றி வாழவும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக அனைவருக்கும் அருள்பாலித்து வருகிறாள்.

மேற்படி நிகழும் மங்களகரமான துன்முகி வருடம் **ஐப்பசி மாதம் 15-ம் தேதி முதல் ஐப்பசி மாதம் 19-ம் தேதி வரை (31-10-2016 திங்கள்கிழமை முதல் 4-11-2016 வெள்ளிக்கிழமை)** வரை அருள்மிகு அழியா இலங்கை அம்மன் திருக்கோயில் திருவிழா குருவருளும், திருவருளும் துணை செய்ய சிறப்பான முறையில் நடைபெற உள்ளபடியால் கிராம பொதுமக்களும் ஆன்மீக அன்பர்கள் மற்றும் பக்தகோடிகளும் மெய்யன்பர்களும் கலந்து கொண்டு அன்னையின் திருவருளால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு காலம் வையகத்தின் வாழ்வாங்கு வாழ அனைவரையும் வருக வருக என அன்போடு அழைக்கின்றோம்.

என்றென்றும் இறைபணியில்

**அருள்மிகு அழியா இலங்கை அம்மன் செம்பூத்துக்குல அறக்கட்டளை**

## நிகழ்ச்சி நிரல்

| தேதி | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| ஐப்பசி 15<br>31-10-2016<br>திங்கட்கிழமை | காலை 5 மணிக்கு | ஸ்ரீ கணபதி ஹோமமம், |
| | காலை 10 மணிக்கு | ஸ்ரீ விநாயகப்பெருமானுக்கு அபிஷேகம்,<br>சிறப்பு பூஜை மற்றும் பிரசாதம் வழங்குதல் |
| | மாலை 6 மணிக்கு | புஷ்ப அபிஷேகம் (பலவித மலர்களால் மிகசிறப்பாக நடைபெறும்) |
| ஐப்பசி 16<br>01-11-2016<br>செவ்வாய்கிழமை | காலை 9 மணிக்கு | 27 நட்சத்திர சுவாமிகள் மற்றும் கன்னிமார்<br>சுவாமிகளுக்கு சிறப்பு பூஜை மற்றும் பொங்கல் |
| ஐப்பசி 17<br>02-11-2016<br>புதன்கிழமை | காலை 10 மணிக்கு | ஸ்ரீ அத்தனூர் அம்மனுக்கு அபிஷேகம்<br>மற்றும் சிறப்பு பூஜை |
| ஐப்பசி 18<br>03-11-2016<br>வியாழக்கிழமை | காலை 11 மணிக்கு | உற்சவர் அபிஷேகம் (முக்கிய திருவிழா நாள்) |
| | இரவு 11 மணிக்கு | வானவேடிக்கை, அம்மன் அழைத்தல், ஊஞ்சல் பாட்டு,<br>தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் |
| ஐப்பசி 19<br>04-11-2016<br>வெள்ளிக்கிழமை | | நாள்முழுவதும் தரிசனம் மற்றும்<br>சிறப்பு பிரசாதம் |

03-11-2016 வியாழக்கிழமை இரவு 8.00 மணி

இறை இசை தென்றல், கலைமாமணி திருமிகு. **வீரமணி ராஜ்**
**அபிஷேக்ராஜ்** மற்றும் **உஷாராஜ்** குழுவினரின்
மாபெரும் **பக்தி இன்னிசை** நிகழ்ச்சி நடைபெறும்.



உபயம் : **அருள்மிகு அழியா இலங்கை அம்மன் செம்பூத்துக்குல அறக்கட்டளை**

இரவு 11.00 மணி மிக பிரமாண்டமான கண்கவரும்
**வண்ணமயமான வானவேடிக்கை** நடைபெறும்.
உபயம் : **செம்பூத்துக்குல அறக்கட்டளை**

**வெள்ளிக்கிழமை நாள் முழுவதும் சிறப்பு அன்னதானம்**
**தினசரி திருவிழா நாட்களில் பிரசாதம் வழங்கப்படும்.**

**அன்பார்ந்த செம்பூத்துக்குல உடன்பிறப்புகளுக்கு,**

1. தங்களிடம் உள்ள அறக்கட்டளையின் உண்டியலையும் பூர்த்தி செய்த உறுப்பினர் விண்ணப்பத்தையும், ஆயா கோவிலுக்கு கிழக்கே அமைந்துள்ள நமது செம்பூத்துக்குல அறக்கட்டளை அலுகலத்தில் ஒப்படைத்து அதற்குரிய ரசீதை பெற்றுக்கொள்ளவும்.
2. மேலும் இப்பொழுது நடைபெறும் கோவில் திருவிழா கலை நிகழ்ச்சி மற்றும் அன்னதானம் போன்றவற்றிக்கு நன்கொடை கொடுக்க விரும்புவர்கள் ஆயா கோவிலுக்கு கிழக்கே அமைந்துள்ள நமது செம்பூத்துக்குல அறக்கட்டளை அலுவலகத்தில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.
3. பூஜைக்கு தேவையானவற்றை பணமாகவோ அல்லது பொருள்களாகவோ ஆயா கோவிலுக்கு கிழக்கே அமைந்துள்ள நமது செம்பூத்துக்குல அறக்கட்டளை அலுவலகத்தில் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவும்.
4. ஆயா கோவில் திருவிழாவில் தொண்டு செய்ய (VOLUNTEERS) விருப்பமுள்ளவர்கள் முன்வந்து தங்கள் பெயரை 94427 38833 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது 1.11.2016 முதல் ஆயா கோவிலுக்கு கிழக்கே அமைந்துள்ள நமது செம்பூத்துக்குல அறக்கட்டளை அலுவலகத்திலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
5. 31.10.2016 திங்கட்கிழமை காலை கணபதி ஹோம பூஜை முதல் 4.11.2016 வரை நமது ஆயா கோவில் திருவிழாவில் நம் பங்காளிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஆயாவின் அருளைப்பெற வேண்டுகிறோம்.

இறையன்புடன் : **அருள்மிகு அழியா இலங்கை அம்மன் செம்பூத்துக்குல அறக்கட்டளை**